DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-178/2025

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பால்ராஜ் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A3 present.)

19.05.2026 – 03.20 PM

முதல் விசாரணை:-

1. நான் சித்துடையான் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வசந்தராணி எனக்கு மகள் உறவு முறை வேண்டும். கடந்த 20.06.2025ம் தேதி மாலையில் எங்கள் ஊரில் நான் இருந்தபோது அ.சா.1ன் வீட்டின் அருகே கீழச்செல்வனூரில் இருந்து போலீசார் வந்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நான் அந்த வழியாக சென்றதால் போலீசார் என்னிடம் விசாரணைக்காக வந்திருப்பதாகவும், அதனால் ஒரு தாளில் கையொப்பம் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்கள். அந்த தாளில் என்ன விவரங்கள் எழுதியிருந்தது என்று எனக்கு நினைவில் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். மேலும் என்ன வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

கடந்த 19.06.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு சித்திரைவேல் மற்றும் என் முன்னிலையில் கீழச்செல்வனூர் போலீசார் அ.சா.1 அளித்த புகார் சம்மந்தமாக வழக்கு

பதிவு செய்து வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றம் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்கு விரோதமாக எதிரிகளின் மிரட்டலுக்கு பயந்து எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி